**சார்பு நீதிமன்றம், பெருந்துறை**
**MCOP No: 149/2022**

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சிவக்குமார் |
| த.க.பெயர் | மாணிக்கம் |
| கிராமம் | சீரங்கம்பாளையம் |
| மாவட்டம் | |
| வயது | 45 |

**ம.சா. 1 நாள் 09.04.2026**

**முதல் விசாரணை: (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)**

நான் எம்சிஒபி 149/2022 மனுவின் மனுதாரர். என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

| | | |
|---|---|---|
| 1. | முதல் தகவல் அறிக்கை | ம.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகசர் | ம.சா.ஆ.2 |
| 3. | மாதிரி வரைபடம் | ம.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (இரு சக்கர வாகனம்) | ம.சா.ஆ.4 |
| 5. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (கார்) | ம.சா.ஆ.5 |
| 6. | காயச்சான்றிதழ் | ம.சா.ஆ.6 |
| 7. | குற்ற இறுதியறிக்கை | ம.சா.ஆ.7 |
| 8. | குற்றவியல் நீதிமன்றத்தில் ஏற்பட்ட முடிவு | ம.சா.ஆ.8 |
| 9. | மருத்துவமனை கட்டண ரசீதுகள் ரூ.121876/-<br>(ஆட்சேபணையுடன்) | ம.சா.ஆ.9 |
| 10. | மருத்துவ பரிசோதனை அறிக்கை | மசாஆ 10 |
| 11 | மருத்துவமனை விடுவிப்பு சான்று | மசாஆ 11 |
| 12 | மனுதாரரின் ஆதார் அட்டை | மசாஆ 12 |
| 13 | மனுதாரின் ஓட்டுநர் உரிமம் | மசாஆ 13 |

| | | |
|---|---|---|
| 14 | மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் தாள் | மசாஆ 14 |
| 15 | விபத்து பதிவேடு | மசாஆ 15 |
| 16 | எனது ஊனச் சான்று | நீமசாஆ 1 |

மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்கக் கோருகிறேன்.

**<u>குறுக்கு விசாரணை (2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u>**

விபத்து சமயத்தில் நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்றேன். நான் சென்ற சாலை குறுகலான சாலை என்றால் சரியல்ல. ஒரே நேரத்தில் இரு வாகனங்கள் அந்த சாலையில் செல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் தான் இரு சக்கர வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்திக் கொண்டேன் என்றால சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றும் அதனால் தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எவ்வித வருமான இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் வயது, வருமானம் ஆகியவற்றை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்ன வேலைக்கு சென்று வருகிறேன் என்றால் சென்டரிங் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றும், தற்போதும் வேலைக்கு சென்று வருவதால் எவ்வித வருமான இழப்பும் இலலை என்றால் சரியல்ல. மருத்துவக் கட்டணங்களை மிகைப்படுத்தி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. 1 எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமீறல் ஏற்படுத்தியுள்ளதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த பொறுப்பல்ல என்றால சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.04.09 13:07:22 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS